
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**886**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**11**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# முடிவுக்கு வந்த 33 ஆண்டு போராட்டம்!

“ஓர் அரசு, பதவிக்கு வரும்போது பணி வழங்குகிறது, மற்றொரு அரசு பதவிக்கு வரும்போது அவர்களின் பணியைப் பறிக்கிறது. இது அந்த பணியாளர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை அல்லவா? எனவே, இந்த விஷயத்தில் தமிழக அரசு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தும் வகையில், முடிவு எடுக்க வேண்டும் என நீதிமன்றம் கருதுகிறது” இது, மக்கள் நலப்பணியாளர்கள் தொடர்பான வழக்கில், 2022-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தெரிவித்த கருத்து.

பேரறிஞர் அண்ணா தன் ஆட்சிக்காலத்தில் உருவாக்கிய சீரணிப்படை, கிராம ஊராட்சி அளவில் பல மக்கள் நலப் பணிகளைச் செய்ததும், நெருக்கடி நிலை காலத்தில் சீரணிப் படை கலைக்கப்பட்டதும் வரலாறு. ஊரகப் பகுதிகள் நீர் நிலைப் பராமரிப்பு, பொதுச் சொத்துகள் பராமரிப்பு எனப் பல பணிகளை இந்தச் சீரணிப் படையினர் செய்து வந்தனர். அடுத்து வந்த எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில், மக்கள் நலப் பணிகளுக்கு என சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்படவே இல்லை.

### மக்கள் நலப் பணியாளர்கள்

இந்த நிலையில், 1989-ஆம் ஆண்டு ஆட்சியில் அமர்ந்த முத்தமிழறிஞர் கலைஞர், ஊரகப் பகுதிகளில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் என்கிற அடிப்படையில், 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மக்கள் நலப் பணியாளர்கள் என்கிற பணியிடத்தை உருவாக்கினார்.

கிராம பொதுச் சொத்துகளைக் காத்தல், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் என கிராம அளவிலான பல பணிகள் இந்தப் பணியாளர்களுக்கு ஒதுக்கப்பட்டன. ஓர் ஊராட்சிக்கு ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என்ற அடிப்படையில், மொத்தம் 12 ஆயிரத்து 617 ஊராட்சிகளுக்கு 25 ஆயிரத்து 234 மக்கள் நலப் பணியாளர்கள் அப்போது நியமனம் செய்யப்பட்டார்கள். அப்போது மாத ஊதியம் ரூ.750 என நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

1991-ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டதும், 13.07.1991 அன்று அன்றைய அ.தி.மு.க. அரசால் மக்கள் நலப் பணியாளர்கள் பணியிடங்கள் ரத்து செய்யப்பட்டன. அதை எதிர்த்து, மக்கள் நலப் பணியாளர்கள் போராட்டம், வழக்கு என அலைந்த நிலையில், 1996-ஆம் ஆண்டில் கழக ஆட்சி அமைந்ததும் மீண்டும் இந்தப் பணியிடங்களுக்கு மீள் பணியமர்த்தினார் கலைஞர். தவிர, அப்போது 10,000 சாலை பணியாளர்களுக்கும் அரசு வேலைவாய்ப்பை உருவாக்கினார்.

பின்னர் அமைந்த அ.தி.மு.க. அரசு, 01.06.2001 அன்று மீண்டும் ரத்து செய்தது. 12.06.2006 அன்று, முதல்வர் கலைஞர் மீண்டும் இந்தப் பணியிடங்களைத் தோற்றுவித்து, ஊராட்சிக்கு ஒருவர் என 12 ஆயிரத்து 618 மக்கள் நலப் பணியாளர் பணியிடங்களை உருவாக்கினார். ஊதிய வரம்பும் ரூ.2500 - ரூ.5000 ஆக உயர்த்தினார். இறுதியாக 08.11.2011-இல், மீண்டும் அன்றைய அ.தி.மு.க. அரசு இப்பணியிடங்களை ரத்து செய்தது.

### பணியமர்த்த மறுத்த அ.தி.மு.க.

தொடர்ச்சியாக, மக்கள் நலப் பணியாளர்கள் சார்பாக பல்வேறு வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இறுதியாக மேல்முறையீட்டு வழக்குகளில் 2014-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று அளித்த தீர்ப்பில் ‘மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீள் பணி வழங்க வேண்டும்’ என உத்தரவிட்டது.


சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை எதிர்த்து, அப்போதைய அ.தி.மு.க. அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த வழக்கின்போது, பணி நீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்க முடியாது என அன்றைய அ.தி.மு.க. அரசு வாதம் செய்தது. இறுதியாக, உச்சநீதிமன்றம் ‘பணி நியமனம் வழங்க உத்தரவிட்டு அளித்த தீர்ப்பிற்கு இடைக்கால தடை’ (Interim stay) விதித்தது.

11.08.2017 அன்று மேற்படி சிறப்பு விடுப்பு மனுக்கள் சிவில் மேல்முறையீடு (Civil Appeal) வழக்காக மாறுதல் செய்யப்பட்டு, கடைசியாக 28. 2. 2022 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிபதி அஜய் ரஸ்தோஹி தலைமையிலான அமர்வில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, தமிழ்நாடு அரசின் புதிய கொள்கை முடிவினை எடுத்து வைத்தனர் அரசு வழக்கறிஞர்கள்.

இதற்கிடையே, மக்கள் நலப் பணியாளர்களின் இடைவிடாத சட்டப் போராட்டம், நீண்ட நாள் கோரிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் 2021-ஆம் ஆண்டு, நம் திராவிட மாடல் நாயகர் ஆட்சி அமைந்ததும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பாக அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. பின்னர், நிலுவையில் உள்ள வழக்கில், தீர்ப்பிற்கு உட்பட்டு நீதிமன்ற ஆணைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து சட்ட வல்லுநர்களோடு ஆலோசனை செய்யப்பட்டு, அரசின் கொள்கை முடிவு உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு உட்பட்டு எடுக்கப்பட்டன.

### திராவிட மாடலின் கொள்கை முடிவு!

குறிப்பாக, 12 ஆயிரத்து 524 கிராம ஊராட்சிகளில் உள்ள ‘வேலை உறுதித் திட்டப் பணி ஒருங்கிணைப்பாளர்’ என்ற பணியிடத்தில் விருப்பம் தெரிவிக்கும் முன்னாள் மக்கள் நலப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பணி வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.




ஓவியம் : ரவி பேலட்

இந்தப் பணிக்கு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட மதிப்பூதியம் ரூ.3,000. அதை ரூ.5,000 ஆக உயர்த்தியும், மக்கள் நலப் பணியாளர்கள் ஏற்கெனவே கிராம ஊராட்சிப் பணிகளில் பணியாற்றியதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு கிராம ஊராட்சிப் பணிகளைக் கூடுதலாக கவனிக்க வாய்ப்பளித்து, அதற்கென மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.2,500 வழங்கவும், இதன்படி இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒட்டுமொத்த மதிப்பூதியமாக ரூ.7,500 வழங்கவும் அரசு முடிவு செய்தது.

இதுமட்டுமல்லாமல், கடந்த 10 ஆண்டு காலத்தில், இறந்துபோன மக்கள் நலப் பணியாளர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு, அவர்கள் விரும்பினால், அவர்களுக்கும் முன்னுரிமை வழங்கி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணி ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

வழக்கின் இறுதி விசாரணையில் இந்த விவரங்களை மக்கள் நலப் பணியாளர்கள் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் பி.வில்சன் எடுத்து வைக்க, அரசின் கொள்கை முடிவினை ஏற்று, வழக்கை முடித்து வைத்தது உச்சநீதிமன்றம்.

அ.தி.மு.க. ஆட்சி அமைத்த ஒவ்வொரு முறையும், மக்கள் நலப் பணியாளர்களை நீக்கியது. கழகம் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் மீண்டும் அவர்கள் பணி அமர்த்தப்பட்டனர். அதற்கிடையில் கழகத்தின் சட்டப் போராட்டம். இப்படி 23 ஆண்டுகளில் 3 முறை பணி நியமனம் பெற்று; 3 முறை பணிநீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களின் துயரம், கழக அரசின் கொள்கை முடிவினால் முடிவுக்கு வந்தது.

ஆட்சிக்கு முன்னர் மக்கள் நலப் பணியாளர்களின் சட்டப் போராட்டத்துக்கு துணை நின்றது கழகம். ஆட்சிக்குப் பின், அந்த சட்டப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, பந்தாடப்பட்டவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிறது கழக ஆட்சி.

> **“ஆட்சிக்கு முன்னர் மக்கள் நலப் பணியாளர்களின் சட்டப் போராட்டத்துக்கு துணை நின்றது கழகம். ஆட்சிக்குப் பின், அந்த சட்டப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, பந்தாடப்பட்டவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிறது கழக ஆட்சி.”**

...தொடரும்

## எடப்பாடியைக் கட்டம் கட்டும் பா.ஜ.க.!

கூட்டணி ஆட்சி என்று பா.ஜ.க. கூறுவதும், அ.தி.மு.க. தலைமையில் கூட்டணி என்று எடப்பாடி கூறுவதும், தமிழ்நாட்டு மக்களுக்கே கேட்டு கேட்டுப் புளித்துவிட்டது. அ.தி.மு.க.-வும் பா.ஜ.க.வும் சேர்ந்து வந்தாலும் சரி, பிரிந்து வந்தாலும் சரி 2026-இல் ஆட்சியமைக்க முடியாது, எதிர்க்கட்சி வரிசைக்கு வேண்டுமானால், போட்டியிடலாம் என்பதுதான் களநிலவரம். அப்படியிருக்கையில், பா.ஜ.க. வலிந்து கூட்டணி ஆட்சி என்று வலிந்து பேசுவதுதான் பின்னால் உள்ள சூட்சமம், எடப்பாடி பழனிசாமியை இருக்கையில் இருந்து கீழிறக்க வேண்டும் என்பதுதான் எனப் பதிவிட்டுள்ளார் எழுத்தாளர் தமிழ் காமராசன்.

இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள பதிவில், “ஈட்டிக்கு ஈட்டி எதிர்முனை பாய முடியாது என்ற ஒரு பழமொழி உண்டு. ஆனால், எடப்பாடி பழனிசாமியும் அமித் ஷாவும் கூட்டணி என்று அறிவித்துகொண்டே, ஒருவருக்கு எதிராக ஒருவர் முட்டிமோதிக் கொள்கின்றனர். கூட்டணி அறிவிப்பின்போது, பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டணி ஆட்சி அமையும் என்றும், எடப்பாடி பழனிசாமி முதலமைச்சர் என்றும் அமித் ஷா அறிவித்ததை, பழனிசாமி அவர்கள் அ.தி.மு.க. - பாஜக கூட்டணி, ஆட்சி அமையும் என்று விளக்கம் சொன்னார்.

மீண்டுமொரு முறை மிகத் தெளிவாகக் கடந்த 27.06.2025 அன்று கொடுத்த நேர்காணல்களில் அமித் ஷா, பா.ஜ.க. அங்கம் வகிக்கும் கூட்டணி ஆட்சி அமைக்கப்படும் என்றும், அ.தி.மு.க.விலிருந்து ஒருவர் முதலமைச்சர் ஆவார் என்றும் அறிவித்தார். இது அ.தி.மு.க.வில் எடப்பாடி பழனிசாமியைக் கட்டம் கட்டும் நடவடிக்கை. மீண்டுமொரு முறை ஜெயலலிதா மறைந்த பிறகு, நடந்த மியூசிகல் சேர் விளையாட்டு நடைபெறும் என்று வெளிப்படையாக அறிவித்துவிட்டார்.

இதற்கு பழனிசாமி அவர்கள் யாருக்கோ பதில் சொல்வதுபோல கூறியுள்ளார். அ.தி.மு.க.வை கபளீகரம் செய்யமுடியாது, தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்போம், வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் பெறுவதற்குதான் கூட்டணி என்று அமித் ஷாவிற்கு மறைமுகமாக விடை கூறியுள்ளார்.

இந்தச் சண்டை எங்கே போய் முடியும்? தெரியவில்லை.

அமித் ஷா நிறைய வாய்ப்புகளைத் திறந்து வைத்துக்கொண்டு உள்ளார். பழனிசாமி அவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் மட்டுமே உள்ளன. ஒன்று அமித் ஷாவுக்கு அடங்கி நடப்பது அல்லது எதிர்ப்பது. இரண்டிலும் பழனிசாமி அவர்களுக்குக் கடும் சேதங்கள் ஏற்படலாம்” எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



எஸ்.ஏ.கே.சித்திக்



### இல்லம் வந்த தளபதி!

1999-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கிடையே நண்பகல் வேளையில் எங்களது இல்லத்திற்கு வருகை தந்துவிட்டுச் சென்றார் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள். அப்போது, அவர், ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினராகவும்,சென்னைமாநகர மேயராகவும் பொறுப்பு வகித்தார். அவருடன் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் ஆவுடையப்பன் மறைந்த எனது தந்தை மூத்த வழக்கறிஞர் எஸ்.ஏ.காதர்,அன்றைய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீரபெருமாள் ஆகியோர் உள்ளனர்.

**-எஸ்.ஏ.கே.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர், திருநெல்வேலி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வடநாட்டில் பெரியார்!

08.10.1941-இல் தந்தை பெரியார் இரண்டாவது முறையாக வடநாட்டுப் பயணம் மேற்கொண்டார். 39 நாட்களை இந்த பயணத்தில் வடநாட்டில் செலவழித்தார். 1940-இல் முதல் முறை சென்றபோது உடனிருந்த பேரறிஞர் அண்ணா, இரண்டாவது முறையும் பெரியாரின் அழைப்பின்பேரில் வடநாட்டுக்குச் சென்றார். அண்ணா 29 நாட்கள் பெரியாருடன் சுற்றுப்பயணத்தில் இருந்தார். பெரியார் தன் வாழ்நாளில் மொத்தம் 4 முறை வட மாநிலங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131